# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 127/மா/2022**

**நாள் : 7.10.2022**

திரு. D.F. தேவபிரகாஷ்,
சென்னை– 600 080. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–7,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொரட்டூர், வெங்கட்ராமன் நகர், 70வது தெரு, சௌத் ரயில்வே ஸ்டேசன் ரோடு, எண்.18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D.F. தேவபிரகாஷ் என்பவரின் 20.07.2022 நாளிட்ட மனு 25.07.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 127/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொரட்டூர், வெங்கட்ராமன் நகர், 70வது தெரு, சௌத் ரயில்வே ஸ்டேசன் ரோடு, எண்.18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D.F. தேவபிரகாஷ் தனது முறையீட்டு மனுவில்,

"I am filing this petition regarding a complaint filed in "Mudhalvarin Mugavari Department" (Ref: MAWS (TN/MAWS/CHN/P/PORTAL/ 08JAN22/2875672) regarding an unauthorized building occupied by Ex AIADMK MLA Mr.S.Vedachalam in Korattur, Chennai 600 080. The court order (Os number – 224 of 2007) and letters from the CMDA to demolish the unauthorized building were sent to "The Commissioner", GCC and my representation was forwarded to the Zonal Officer – Zone 7 to carry out the demolition. However, no action was taken by the Zonal Officer regarding the unauthorized building.

As a result, I contacted the Regional Deputy Commissioner (Central) to take necessary action regarding the complaint against Ex AIADMK MLA Mr.S. Vedachalam. The Regional Deputy Commissioner had forwarded my representation to the Assistant Law Officer and I was asked to attend an enquiry regarding the complaint. During the enquiry, I have provided all the necessary information requested by the Assistant Law Officer. To obtain the enquiry report, I had been to the office of the Regional Deputy Commissioner (Central) and was advised to meet with the Zonal Officer. Despite taking several months to provide the enquiry report, the Assistant Law Officer had provided us with a response that failed to mention the court order (OS number – 224 of 2007). Nevertheless, the officials had committed to take action.

Recently, a pre-notice was sent to me by the Assistant Engineer, Division 84, Zone-7 to submit the approved plan of a 55 year old building (our home) in an attempt to discourage us to proceed further against the complaint on Ex AIADMK MLA Mr. S. Vedachalam. I have also provided an appropriate response to the Assistant Engineer regarding the pre-notice. Sir, this baseless pre-notice was purposely sent by the The Assistant Engineer, Division 84, Zone-7 in an attempt to avoid taking action on the complaint filed by me regarding the unauthorized building occupied by Ex-AIADMK MLA Mr. S. Vedachalam.

Sir, the higher officials have sincerely looked at out complaint and have directed the officials at Zonal level to take necessary action. Nonetheless, the Assistant Engineers from division 84. Zone-7 have failed to take any responsible action against Ex. AIADMK MLA Mr. S. Vedachalam as they seem to have colluded with him. Sir, we have provided all the necessary documents (Google Drive – Public Folder) regarding our complaint for your kind reference and sincerely request you to take necessary action to demolish the unauthorized building" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 21.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"சென்னை கொரட்டூர் ரயில்வே ஸ்டேசன் ரோடு எண் D1 மற்றும் D 54ல் வணிக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேதாச்சலம் என்பவரின் மனைவி மோகனா என்பவருக்கு சொந்தமான மேற்கண்ட கட்டடம் அங்குள்ள பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது, கடந்த 2007ம் ஆண்டில் மேற்கண்ட இடம் அம்பத்தூர் நகராட்சியைச் சார்ந்திருந்ததால், அம்பத்தூர் நகராட்சியின் கடிதம் 18.4.2007ல் மேற்கண்ட கட்டடத்திற்கு Demolition Notice சார்வு செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்நேர்வு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு

நிலுவையில் இருந்த நிலையில், அம்பத்தூர் நகராட்சியால் மேல்நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. பின்னர் மேற்கண்ட வழக்கு முடிவடைந்துவிட்டது. மேற்கண்ட வணிகக் கட்டடம் அமைந்துள்ள இடம் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளது. பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு வேதாச்சலம் என்பவரின் மனைவிக்கு சொந்தமான மேற்கண்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையையும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மூலம் இதுவரை எடுக்கப்படவில்லை. எனவே, பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீதும், கட்டட உரிமையாளர் மீதும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 20.7.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவி செயற்பொறியாளர் 21.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"சென்னை கொரட்டூர் ரயில்வே ஸ்டேசன் ரோடு எண் D1 மற்றும் D 54ல் திருமதி மோகனா என்பவருக்கு சொந்தமான வணிக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டடம் அங்குள்ள பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக புகார் அளித்ததைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடம் என்னால் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் புகாரையொட்டி, மேற்கண்ட கட்டடத்திற்கு முதற்கட்ட தாக்கீது (pre notice calling for plan) 27.5.2022 அன்று கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்தை அளவீடு செய்து தருமாறு அம்பத்துார் வட்டாட்சியருக்கு 19.4.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அம்பத்துார் வட்டாட்சியரிடமிருந்து பதில் பெற்ற நிலையில், மேற்கண்ட பதிலில் சரிவர விவரங்கள் அளிக்கப்படாததால், மேற்கண்ட இடம் தொடர்பாக அனைத்து விவரங்கள் வேண்டி அம்பத்துார் வட்டாட்சியருக்கு 27.5.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டு, அவரிடமிருந்து இன்னும் பதில் பெறப்படவில்லை. மேற்கண்ட முதற்கட்ட தாக்கீதைத் தொடர்ந்து Lock and Seal Notice 4.7.2022 அன்று அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கையாக Deoccupation Notice 10.8.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்கண்ட கட்டட உரிமையாளர் திருமதி மோகானா என்பவர் மேற்கண்ட வணிக கட்டடம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W P No.22150 of 2022 ) தொடர்ந்துள்ளார். இவ்வழக்கின் மீதான 26.8.2022 நாளிட்ட தீர்ப்பில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலரிடம் கட்டட உரிமையாளர் திருமதி மோகனா அவர்கள் கட்டட வரைமுறை தொடர்பாக விண்ணப்பம் அளிக்கும்படியும், அவ்விண்ணப்பத்தின் மீது 3 மாத காலத்திற்குள் பரிசீலனை செய்து முடித்து வைக்கும்படியும், அதுவரை இந்நேர்வில் தற்போதைய நிலையே தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறத் துறையிலிருந்து இந்நேர்வு தொடர்பாக எவ்வித பதிலும் மாநகராட்சியால் பெறப்படவில்லை. எனவே, மேற்கண்ட கட்டடம் மீது தற்போது மேல்நடவடிக்கை எதையும் தொடர இயலாத நிலையில் உள்ளது. வீட்டு வசதி மற்றும நகர்ப்புறத் துறை செயலரிடமிருந்து ஆணை பெறப்பட்டவுடன் இந்நேர்வில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-7ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

சென்னை கொரட்டுர் ரயில்வே ஸ்டேசன் ரோடு எண் D1 மற்றும் D 54ல் வணிக கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேதாச்சலம் என்பவரின் மனைவி மோகனா என்பவருக்கு சொந்தமான மேற்கண்ட கட்டடம் அங்குள்ள பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது, எனவே, பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீதும், கட்டட உரிமையாளர் மீதும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் இம்முறை மன்றத்தை கோரியுள்ளார்.

சென்னை கொரட்டுர் ரயில்வே ஸ்டேசன் ரோடு எண் D1 மற்றும் D 54ல் திருமதி மோகனா என்பவருக்கு சொந்தமான வணிக கட்டடம் அங்குள்ள பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக வந்த மனுதாரரின் புகாரையொட்டி, மேற்கண்ட கட்டடத்திற்கு முதற்கட்ட தாக்கீது (pre notice calling for plan) **27.5.2022** அன்று கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதும், மேற்கண்ட முதற்கட்ட தாக்கீதைத் தொடர்ந்து Lock and Seal Notice 4.7.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கையாக Deoccupation Notice 10.8.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், திருமதி மோகானா என்பவர் மேற்கண்ட வணிக கட்டடம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W P No.22150 of 2022) தொடர்ந்துள்ளார். இவ்வழக்கின் மீதான **26.8.2022** நாளிட்ட தீர்ப்பில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலரிடம் கட்டட உரிமையாளர் திருமதி மோகனா அவர்கள் கட்டட வரைமுறை தொடர்பாக விண்ணப்பம் அளிக்கும்படியும், அவ்விண்ணப்பத்தின் மீது 3 மாத காலத்திற்குள் பரிசீலனை செய்து முடித்து வைக்கும்படியும், அதுவரை இந்நேர்வில் தற்போதைய நிலையே தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஆவணங்கள் (ம) எதிர்மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. மேற்கண்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறத் துறையிலிருந்து இந்நேர்வு தொடர்பாக எவ்வித பதிலும் மாநகராட்சியால் பெறப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

இருப்பினும் திருமதி. மோகனா என்பவரால் பாதையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று மனுதாரரிடமிருந்து புகார் வந்த பிறகுதான் மண்டல அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஏற்கத்தக்கதல்ல. முதல் அறிவிப்பில் (Calling for Plan) 27.5.2022லும் அதனை தொடர்ந்து 4.7.2022ல் அடுத்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் ஆரம்பத்திலேயே கள அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டிருந்தால் பாதை ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்காது. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அதன் பிறகு மனுதாரரிடமிருந்து புகார் மனு வரப்பெற்ற பிறகுதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. எனவே இவ்வாறு பொறுப்பற்ற முறையில் மெத்தனமாக செயல்பட்ட மண்டல அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -7ன் உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளவாறு இப்பொருள் தொடர்பாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறத் துறை செயலரிடமிருந்து ஆணை பெறப்பட்டவுடன் அதன்படி உரிய நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் மண்டல அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**The Zonal officials have committed the lapse of inordinately delaying the action on the complaint of the petitioner in a wanton and wilful manner giving rise to suspicions about their trustworthiness as a public servants. The Greater**

**Chennai Corporation Commissioner is directed to initiate necessary disciplinary action against all the concerned involved in this protracted dragging even before the party approached the High Court for relief.**

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. D.F. தேவ பிரகாஷ்,
எண்.18, தெற்கு ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
70வது தெரு, வெங்கட்ராமன் நகர்,
கொரட்டூர், சென்னை – 600 080.

2) மண்டல அலுவலர்,
மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளூர் நெடுஞ்சாலை, டன்லப் எதிரில்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

3) உதவி செயற் பொறியாளர்,
மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளூர் நெடுஞ்சாலை, டன்லப் எதிரில்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

4) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.